# செயற்றிட்டங்கள்- 06.01.024 - 16.12.2025

செயற்றிட்டம் -1

பாடசாலை அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க மிகவும் முக்கியமான ஒன்றாக கருதப்பட்ட விசேட தேவையுடைய மாணவர்களுக்கான “U” வடிவிலான மேசை மற்றும் கதிரைகளை 150000 ரூபா பெறுமதியில் எமது பாடசாலை பழைய மாணவி திருமதி கஜரூபி பிரணவன் அவர்கள் அன்பளிப்பு செய்திருந்தார்.

செயற்றிட்டம் - 2

பாடசாலை அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க பிரித்தானிய பழைய மாணவர் சங்க அனுசரணையில் ஆரம்ப பிரிவுக்கு மின்விசிறிகள் பொருத்தப்பட்டது( 2024 April மாத காலப்பகுதியில்)

செயற்றிட்டம் - 3

எமது பாடசாலை பிரதி அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க பாடசாலைக்கு தேவையான விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு 100000ரூபா நிதி பிரித்தானிய பழைய மாணவர் சங்க உறுப்பினரான திரு வவானந்தன் ஆறுமுகம் அவர்களால் அன்பளிப்பு செய்யப்பட்டது (2024 July மாத காலப் பகுதியில் )

செயற்றிட்டம் - 4

பாடசாலை அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க பிரித்தானிய பழைய மாணவர் சங்கத்தினரால் பழுதடைந்திருந்த பிரதி எடுக்கும் இயந்திரம் 96000 ரூபா செலவில் திருத்திக் கொடுக்கப் பட்டது. (2024 July மாத காலப் பகுதியில்)

செயற்றிட்டம் - 5

பிரித்தானிய பழைய மாணவர் சங்க பொருளாளர் திரு சுப்பிரமணியம் சிவதாசன் அவர்கள் வறிய நிலையில் உள்ள மாணவர் ஒருவருக்கு வருடாந்தம் சுழற்சி முறையில் கற்றல் நிதியை வழங்கும் திட்டத்திற்கு அவரது சகோதரர் அமரர் சுப்பிரமணியம் கணேசதாஸ் நினைவாக அவரது நண்பர்களது பங்களிப்புடன் தனது பங்களிப்பையும் சேர்த்து 500000ரூபா நிதியினை தாய்ச்சங்கத்திடம் கையளித்திருந்தார் . இந்த நிதி தாய்ச்சங்கத்தால் நிரந்தர வைப்பிலிடப்பட்டுள்ளது. (2024 June மாத காலப் பகுதியில்)

செயற்றிட்டம் - 6

பாடசாலை மைதானத்தில் உள்ள ஆண்களுக்கான மலசல கூடத்தில் உள்ள நீர்க்குழாய்களும் , ஆண் மாணவர்கள் குளிக்கும் இடத்தில் உள்ள நீர்க்குழாய்களும் கிட்டத்தட்ட 22750 ரூபா செலவில் பிரித்தானிய பழைய மாணவர் சங்கத்தினரால் புதுப்பிக்கப்பட்டன. (2024/ September காலப்பகுதியில்)

செயற்றிட்டம் - 7

வருடாந்தம் புலமை பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை தயார்ப்படுத்தலில் மேலதிக வகுப்புகளிற்கான ஆசிரியர் கொடுப்பனவு மற்றும் வினாத்தாளுக்கான கொடுப்பனவாக 150000 ரூபாவை பிரித்தானிய பழைய மாணவர் சங்க செயலாளர் திரு சண்முகதாஸ் கிருபானந்தன் ( நந்தன் ) அவர்கள் 2024 ம் ஆண்டுக்கான கொடுப்பனவாக வழங்கியிருந்தார்.

செயற்றிட்டம் - 8

2024 ஆம் ஆண்டு சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் பெறுபேற்றை உயர்த்தும் முகமாக மாதிரிப் பரீட்சைகளை நடத்துவதற்காக பிரித்தானியா வாழ் பாடசாலையின் பழைய மாணவன் திரு திருமால் கிருபாகரராசாவால் 35000 ரூபா வழங்கப்பட்டது.

செய்ற்றிட்டம் - 9

2023 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய 9 மாணவர்களும் பிரித்தானிய பழைய மாணவர் சங்க நிர்வாக உறுப்பினர் திரு ஆறுமுகம் வவானந்தன் அவர்களால் 2024 ஆம் ஆண்டு பணப்பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

செயற்றிட்டம் - 10

எமது பாடசாலையின் பழைய மாணவர் திரு வே. சிவசுந்தரம் அவர்கள் 2024 ஆம் ஆண்டு தாயக பயணத்தின் போது தாய்ச்சங்க நிர்வாகத்தினரிடம் 1 000 000 ரூபா காசோலையை அன்பளிப்பாக வழங்கியிருந்தார் . அந்த நிதியை ஆரம்ப விளையாட்டு நிதியத்துக்கான நிதியாக தாய்ச் சங்க நிர்வாகம் வைப்பிலிட்டுள்ளது.

செயற்றிட்டம் - 11

பிரித்தானியா வாழ் பழைய மாணவரான திரு கலாமோகன் அவர்களால் சில வருடங்கள் முன்பு முகப்பு வளைவு ஆரம்ப வேலைகளுக்காக 600000 ரூபா வழங்கப்பட்டது . இருப்பினும் சில நடைமுறை சிக்கல்களால் அந்த வேலைத்திட்டம் கைவிடப்பட்டது . 2024 ஆம் ஆண்டு October மாத காலப்பகுதியில் அவரது ஒப்புதலோடு அவரது சகோதரன் மற்றும் சகோதரி நினைவாக குறித்த நிதி விளையாட்டு நிதியமாக நிரந்தர வைப்பிலிடப்பட்டுள்ளது.

செயற்றிட்டம் - 12

எமது பாடசாலை உயர்தர மாணவன் ஒருவரால் எமது பிரித்தானிய பழைய மாணவர் சங்கத்துக்கு அனுப்பப்பட்ட கோரிக்கையை பிரித்தானிய பழைய மாணவர சங்க பொருளாளர் திரு சு. சிவதாசன் அவர்கள் தனது சகோதரி மூலமாக மாணவனின் கற்றலுக்கான மொத்தச் செலவினையும் யா/ பரியோவான் கல்லூரியின் 1987 உயர்தர பழைய மாணவர் சமூக அமைப்பின் உறுப்பினரான திருமதி சுகந்தினி நந்தகுமார் ( சிவதாசனின் சகோதரி) அவர்கள் சங்கத்தின் ஊடாக 2024 ஆம் ஆண்டு April/ May காலப்பகுதியில் பெற்றுக் கொடுத்திருந்தார்.

செயற்றிட்டம் - 13 2025

2024 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்ற மூன்று மாணவர்களுக்கு 23/02/2025 அன்று பிரித்தானிய பழைய மாணவர் சங்க நிர்வாக உறுப்பினர் திரு வவானந்தன் ஆறுமுகம் அவர்கள் ஊக்குவிப்பு பரிசில்களும் அப்பியாசப் புத்தகங்களும் வழங்கி கௌரவித்திருந்தார்.

செயற்றிட்டம் - 14

தரம் ஐந்து புலமைப்பரிசில் 2025 மாணவர்களுக்கான விசேட வகுப்புகள் நடாத்தவும் வினாப்பத்திரங்கள் எழுது பொருட்களை கொள்வனவு செய்யவும் பிரித்தானிய பழைய மாணவர் சங்க செயலாளர் திரு கிருபானந்தன் சண்முகதாஸ் அவர்கள் வருடந்தோறும் செய்து வருவதோடு இந்த ஆண்டும் அதற்கான கொடுப்பனவாக 141550 ரூபா நிதியினை வழங்கியிருந்தார்.

செயற்றிட்டம் - 15

பிரித்தானியா வாழ் பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகளின் பங்களிப்புடன் 2025 June மாத காலப்பகுதியில் எமது பாடசாலையைச் சுற்றியுள்ள மதில் பூச்சு வேலைகளும் , அதற்கான வர்ண பூச்சு வேலைகளும் அத்துடன் ஒரு வகுப்பறைக்கான வர்ண பூச்சு வேலைகளும் 12 000 00 ரூபா செலவில் நிறைவேற்றிக் கொடுக்கப்பட்டுள்ளன.

செயற்றிட்டம் - 16

2024 ஆம் ஆண்டிற்கான சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சைகளை நடாத்துவதற்கு 2025 ஆம் ஆண்டு 35000 ரூபா நிதியினை பழைய மாணவன் திருமால் கிருபாகரராசா அவர்கள் அன்பளிப்பு செய்திருந்தார்.

செயற்றிட்டம் - 17

2025 ஆம் ஆண்டிற்கான க.பொ.த

சாதாரண தரப் பொதுப் பரீட்சைக்கு தோற்ற உள்ள மாணவர்கள் இடர்படும் பாடங்களில் விசேடமான செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக பிரித்தானியாவில் வசிக்கும் பழைய மாணவி டக்சாயினி சபாரத்தினம் அவர்கள் 2025 September மாத காலப் பகுதியில் 85000 ரூபாவை தாய்ச்சங்கத்தினூடாக வழங்கியிருந்தார்.

செயற்றிட்டம் - 18

2025 தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு பிரித்தானிய் பழைய மாணவர் சங்க நிர்வாக உறுப்பினர் திரு வவானந்தன் ஆறுமுகம் அவர்கள் பணப்பரிசில்களை வழங்கியிருந்தார். வருடாவருடம் இச்சிறப்பு பரிசில்களை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2025 September மாத காலப் பகுதியில் )

செயற்றிட்டம் -19

திரு வவானந்தன் ஆறுமுகம் அவர்கள் 2027 ஆம் ஆண்டு பவளவிழா ஆண்டை நோக்கி பாடசாலையை அழகு படுத்தும் எண்ணக் கருவின் கீழ் 243000 ரூபா செலவில் பாடசாலை மைதானத்தை சூழ 100 palm trees களையும் 40 புங்கை மரங்களையும் நட்டதுடன் அதற்கான நீர் விநியோக வசதியையும் பராமரிப்பாளருக்கான தற்காலிக ஊதியத்தையும் 2025 ஆம் ஆண்டு September மாத காலப் பகுதியில் செய்து கொடுத்திருந்தார்.

செயற்றிட்டம் - 20

பிரித்தானியாவில் வசிக்கும் அமரர் தம்பையா சுப்பிரமணியம் அவர்களின் குடும்பத்தினர் எமது பாடசாலையில் தரம் 6 தொடக்கம் தரம் 9 வரை உள்ள வகுப்புகளில் தமிழில் எழுத வாசிக்க இடர்படும் மாணவர்களுக்கான விசேட வகுப்புகளை நடாத்தி அவர்களின் எழுத வாசிக்கும் ஆற்றலை அதிகரிப்பதற்கான செயற்திட்டத்தை மேற்கொள்வதற்கு தேவையான நிதி உதவியை அமரர் தம்பையா சுப்பிரமணியம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவாக (18/10/2025) வழங்கியிருந்தனர். இவ் வேலைத்திட்டம் 2025 காரத்திகை மாதம் ஆரம்பத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.